பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10:00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 07 ஞாயிற்றுக்கிழமை (21.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 57

## வாகரையிலிருந்து

# இடம்பெயர்ந்து வரும் அகதிகள் படையினரின் கடும் சோதனைக்குள்

## இதுவரை வெளியேறாதவர்கள் குறித்து யு.என்.எச்.சி.ஆர் கவலை

மாங்கேணி, ஜன.21

**வாகரை நகரப் பகுதி, அரசாங்கப்படைகளின் கட்டுப்பாட்டில் வந்ததைத் தொடர்ந்து, இடம்பெயர்ந்து வரும் ஆயிரக்கணக்கான அகதிகள் பலத்த சோதனையின் பின்னரே பயணத்தைத் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.**

**இதனால் அகதிகள் பெரும் இ... ...ஞ்சல்களுக்கும் சிரமங்களுக்கும் ஆளாகிவருகின்றனர்.**

அகதிகளுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளும் நகருக்குள் வரக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டாலுங்கூட, இது ஏற்கனவே நொந்து போனவர்களை மேலும் வேதனைக்கு ஆளாக்குவதாக மக்கள் கவலை தெரிவித்ததாக - சர்வதேச செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்தது.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல, படையினர் அகதிகளிடம் நடத்திய உடற்சோதனை உட்பட சோதனைகளின்போது விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 11 பேர் தடுத்துவைக்கப்பட்டதாக அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

### ஐ.நா. கவலை

இதேவேளை, வாகரையில் இருந்து இதுவரை வெளியேறாது இருக்கும் மக்கள்

(04ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் மட்டக்களப்பு சென்றனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளுவதற்கென இரு கண்காணிப்பாளர்கள் நேற்று அங்கு சென்றுள்ளனர்.

கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஓமர்சன் இத்தகவலைத் தெரிவித்தார்.

மற்றும் இரு கண்காணிப்பாளர்கள் நாளை திங்கட்கிழமை அங்கு அனுப்பப்படவிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வாகரைப் பிரதேசத்தில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்குமாறு பாதுகாப்புத் தரப்பிடம் கோரியுள்ளதாகவும் -

அனுமதி கிடைத்தவுடன் கண்காணிப்பாளர்கள் அங்கு அனுப்பப்படுவர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி, திருமலைப் பகுதிகளுக்கு இன்னும் சில தினங்களில் கண்காணிப்பாளர்கள் அனுப்பிவைக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு கண்காணிப்பாளர்கள் கடந்த வியாழக்கிழமை வந்து சேர்ந்தமை தெரிந்ததே. (அ-1)

## பயண வசதி கிட்டாத ஆயிரம் பேர் நேற்று மனித உரிமை ஆணைக்குழு முன் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்காகக் காத்திருக்கும் பயணிகள், நேற்று யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

படையினரின் அனுமதியைப் பெற்றிருந்தும் நீண்ட காலமாக கொழும்பு செல்வதற்கு காத்திருக்கும் சுமார் ஆயிரம் பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இறுதியில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவின் இணைப்பதிகாரி து. சுரேந்திரராஜாவிடம் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

★கப்பல் பயணத்துக்குரிய படையினரின் அனுமதியைப் பெற்ற பின்னரும் 3 மாதங்களுக்கும் மேலாக கப்பல் பயணத்துக்காகப் பகல் இரவாகக் காத்து நின்றும் உரிய போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு, உரிய ஒழுங்கின்படி பயணிகளைத் தாமதமில்லாமல் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

★ யாழ்.சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் இரவு பகல் என்றும் பாராது உண்ண உணவின்றி தங்குவதற்கு ஏற்ற வசதிகளின்றி, குடிதண்ணீர், மற்றும் மலசலகூட வசதிகளின்றி பயணிகள் குறிப்பாக பெண்கள், குழந்தைகள், நோயாளர்கள், கர்ப்பிணிகள் என ஏராளமான பயணிகள் திண்டாடுகின்றனர். எனவே இவர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளைச் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★சில பயணிகள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி காலதாமதமின்றிப் பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்த நிலையே அரசாங்க ஊழியர்களுக்கும். இத்தகைய நடவடிக்கைகளால் ஏனைய பயணிகள் குறிப்பாக அவசர தேவைக்காகச் செல்லவேண்டியவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

★ இது குறித்து யாழ்.அரச அதிபருக்கு முறையிட்டும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே முதலில் அனுமதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பயண ஒழுங்குகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

★ பயண ஏற்பாடுகள் பற்றிய விவரங்களை மக்கள் முன்னரே அறிந்து கொள்ளக் கூடியதாக உரிய நேரத்தில் ஊடகங்கள் மூலம் அறிவிக்கவேண்டும்.

இவற்றுடன் மற்றும் பல கோரிக்கைகள் மகஜரில் அடங்கி உள்ளன.

ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள் எனப் பல தரப்பினரும் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தின் முன்னால் கூடி நின்றதால் ஆணைக்குழுவினரின் வழமையான செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. மனித உரிமை ஆணைக்குழு அலுவலகமே பெரும் அமளி துமளிப்பட்டது. பிற்பகல் ஒரு மணியளவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

## கதிரவெளியும் தம்வசமானதாக படைத் தரப்பின் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜவ.21

வாகரைப் பிரதேசத்தை அடுத்துள்ள கதிரவெளிப் பகுதியை அரசாங்கத் துருப்புக்கள் நேற்றுத் தம்வசமாக்கிக் கொண்டதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியும் நேற்று படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டதாகவும் அவர் மேலும் தகவல் தெரிவித்தார்.

மேலும் வாகரையிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் படையினர் நேற்று கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் அகற்றுவதிலும், வீதிகளை துப்புரவு செய்வதிலும் ஹெலி தரை இறங்குவதற்கான திடல்களைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பின் ஏனைய பகுதிகளில் தெட்டம் தெட்டமாக அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் நிலைகளைக் கைப்பற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெறும் எனவும் அவர் விவரித்தார். (அ)

## சிவில் நிர்வாகத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்க இராணுவத் தளபதி அறிவுறுத்து

### நேற்றைய பலாலி மாநாட்டில்

யாழ்ப்பாணம்,ஜன.21

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, சிவில் நிர்வாக அதிகாரிகளுடன், ஒத்துழைக்க வேண்டும். அதற்கு உகந்த வகையில் பாதுகாப்புத் திட்டங்களில் மாற்றங்கள் செய்யவேண்டுமெனின் பொருத்தமான விதத்தில் அவற்றைச் செய்யலாம்.

இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, குடாநாட்டில் உள்ள களத் தளபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இராணுவத் தளபதி நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். அவரை யாழ். படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி பலாலி விமான நிலையத்தில் வரவேற்றார்.

பலாலி படைத் தலைமையகத்தில் குடாநாட்டில் உள்ள படையணிப் பிரிவுகளின் தளபதிகளுடன் மாநாடு ஒன்றை இராணுவத் தளபதி நடத்தினார்.

குடாநாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்து மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. இனிமேல் மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்புத் திட்டங்கள் குறித்தும் அங்கு ஆராயப்பட்டது. (அ)

## தமிழக முதல்வரை சாயி பாபா சந்திப்பு

சென்னை, ஜன.21

தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியை சத்ய சாயி பாபா நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்ற சாயிபாபா முதல்வருடன் பல விடயங்கள் குறித்து பேசியதுடன் ஆசியும் வழங்கியுள்ளார். (அ-1)

## இந்தியா விரும்பும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும்

### தமிழக சட்டசபையில் ஆளுநர் பர்னாலா

சென்னை, ஜன.21

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு இந்திய அரசு விரும்புகின்ற வகையில் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படவேண்டும்.

- இவ்வாறு தமிழக ஆளுநர் பர்னாலா தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப் பேரவையின் இவ்வாண்டுக்கான அமர்வை நேற்று ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அண்மைக் காலத்தில் இலங்கையில் வாழும் தமிழர்கள் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் இன்றிச் சந்தித்துவரும் சொல்லொணாத் துயரங்கள் குறித்து இந்த மாநில அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்திக்கும் பிரதமருக்கும் தமிழக முதல்வர் கருணாநிதி எழுதியுள்ள கடிதங்கள், அக்கடிதங்களுக்கு அவர்கள் அளித்த பதில்கள் இலங்கைத் தமிழர்களுக்கு நிம்மதியளிப்பதாகவும், நம்பிக்கை ஊட்டுவதாகவும் அமைந்துள்ளன.

இந்நிலையில் பல ஆண்டுகளாக நிலவிவரும் இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்துகின்றது- என்று அவர் கூறினார்.

## திருட்டுக் கோஷ்டியின் சூட்டுக்கு ஆசிரியர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் வீதியில் நேற்று நள்ளிரவு 11 மணியளவில் திருட்டுக் கோஷ்டியின் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்தவரும் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியருமான மகாலிங்கம் விக்னேஸ்வரன்(வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

அவரது வீட்டில் திருட முயன்ற திருடர்களை அயலிலுள்ளவர்கள் சேர்ந்து கலைக்க முயன்ற சமயம் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (1-78)

## கண்காணிப்புக் குழு - புலிகள் அடுத்த வாரத்தில் சந்திப்பு

### யுத்தநிறுத்த உடன்படிக்கை குறித்து ஆராய்வதற்கு

கிளிநொச்சி, ஜன.21

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணும் முகமாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர்ஜெனரல் லார்ஸ் யோகான் செல்பேர்க் விடுதலைப் புலிகளின் தலைவர்களை அடுத்த வாரம் சந்தித்து ஆராயவுள்ளார்.

கடந்த வாரத்தில் கிளிநொச்சிக்கு சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்க ஹெலிகொப்டர் வசதி செய்து தருமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசிடம் கோரியிருந்தது.

ஆனால், அதற்கான அனுமதி அப்போது கிடைக்கவில்லை. எனினும் ஹெலி வசதி செயற்வதற்குரிய அனுமதி இப்போது கிடைத்துள்ளதால் அடுத்தவாரம் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சந்திக்கவுள்ளார். (அ-1)

## யுத்தம் ஏற்படுவதைத் தவிர்ப்பது அரசியல் தலைவர்களின் கைகளில்

### அமெரிக்கத் தூதுவர் சொல்கிறார்

கொழும்பு, ஜன.21

இலங்கையில் யுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அரசியல் தலைவர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

கொழும்புக்கான அமெரிக்கத் தூதர் பிரையின் கோ பிளேக் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று நேற்றுமுன்தினம் அவரைச் சந்தித்தது. அவ்வேளையிலேயே மேற்கண்ட தமது கருத்தை வெளியிட்டார்.

அரசியல் பிரச்சினைகளுக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண்பதற்கு இடமளிக்கக் கூடாது: பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இளிருட்டிய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்

T.P.: 0777-903090
0777 246117


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் ஐயன் கந்தசாமி (ராசு)

மலர்வு: 20-10-1945 உதிர்வு: 01-02-2006

பாசமுடன் எம்மைக் காத்து
பண்புடனே எம்மை வளர்த்தீர்
இறைவனடி சேர்ந்தாலும்
எங்கள் உயிர் உள்ளவரை உங்களை மறவோம்.

வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(57354)

மனைவி,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## ஜெகநாதன் சிவவதனி
(ஆசிரியர், கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)

அன்னை மடியில்
1977★04★17

கடல் அன்னை மடியில்
2006★12★21

தினம் அழுகின்றோம் நீயில்லா மண்ணில் - நாம்
எப்படித்தான் ஆறவென ஏங்கித் தவிக்கின்றோம்
எங்கள் குடும்பத்து வண்ணநிலவே! நீ எங்கே?
கடல் பயணத்தில் வந்தவளே
காலனவன் கடலினிலே மறைத்ததேனோ!
பேரிடியால் நம் குடும்பம் பித்தாகி நிற்கிறதே
தாளவில்லை எம் மனது வதனியே! உன் பிரிவை
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் என்றும் உன்
ஆத்ம சாந்திக்காய்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முருகமூர்த்தி கோயிலடி,
உடுவில் தெற்கு, சுன்னாகம். (56969)

என்றும் உன் நினைவில்:
- குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்
சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் மாதன் வேலுப்பிள்ளை
(இளைப்பாறிய புகையிரத நிலைய ஊழியர்)

| உதிப்பு | உதிர்வு |
|---|---|
| 01 - 09 - 1938 | 22 - 12 - 2006 |

திங்களொன்று சென்றதுவே - நின்
திருமுகத்தை நாம் பார்த்து
எங்களைத் தவிக்க விட்டு
எங்கு தான் சென்றீர் ஐயா?
எங்கள் உயிர் உள்ள வரை
உங்கள் நினைவு அகலாது!

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
(சி/51862)

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை



22.12.2006 இல் சிவபதமடைந்த எமது இல்லத்தரசி

## அமரர் நடராசா அழகம்மா

அன்னை மடியில்: 02-06-1926
ஆண்டவன் மடியில்: 22-12-2006
திதி: துதியை

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (21.01.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

10/2, அம்பகர் வீதி,
பிரம்படி, கொக்குவில். (57008)

- குடும்பத்தினர்.

---

சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் அன்பர்களின் வேண்டுதல்களுக்கு அமைய முதியோரைப் பேணும் பணியில் ஈடுபட்டுள்ளது. சைவப் பாரம்பரியத்தின் அடிப்படையில் சுழிபுரம், வழக்கம்பராய் கிராமத்தில் இவ் இல்லம் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. இறையருளாலும், பெரியோர்களின் ஆசியாலும் விரைவில் இல்லப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- பராமரிப்புக்கு உதவியில்லாத அறுபது வயதுக்கு மேற்பட்ட இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- சிவபூமி முதியோர் இல்லத்தில் வசிப்பதற்கு விரும்பும் முதியோர் பின்வரும் விவரங்களைச் சமர்ப்பித்து, பின் நேர்முகச் சந்திப்பின் பின் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பம்
1. முழுப்பெயர்:
2. முகவரி:
3. அடையாள அட்டையின் பிரதி:
4. கிராம அலுவலரால் வழங்கப்பட்ட உதவியற்றவர் என்ற அத்தாட்சிக் கடிதம்
5. வசிப்பிடச் சூழலில் வாழும் ஆன்மீகப் பெரியார்கள் அல்லது பாடசாலை அதிபர்கள் அல்லது நிறுவனத் தலைவர்களின் சிபார்சுக் கடிதம்.

விண்ணப்பங்கள் யாவும் 01.02.2007ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:
நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(57232)

---

# தவறிவிட்டது

92, கொழும்புத்துறை வீதியைச் சேர்ந்த சிவானந்தன் மகேஸ்வரி என்பவரின் தேசிய அ.அட்டை இல. (495612031V), விசேட அ.அ. என்பன சுன்னாகம் - தெல்லிப்பழைக்கு இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மல்லாகம் மதவடி திருஞானசம்பந்தர் பாடசாலைக்கு முன் உள்ள சுந்தரலிங்கம் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

# மணமகன் தேவை

[illegible] 1972இல் பிறந்த, திருவோணம் நட்சத்திரம், 4'9" உயரமுடைய, செவ்வாய் தோஷமுடைய குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்ற, கொழும்பு சர்வதேச பாடசாலை ஒன்றில் ஆங்கில ஆசிரியையாகக் கடமைபுரியும் பொதுநிறமுடைய மணமகளுக்குத் தகுந்த மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும்.

தொடர்பு: விளம்பர இல. 2946. [illegible]

# தவறிவிட்டது

ஜெயபுரம், பல்லவராயன்கட்டு என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தையா நாகப்பு என்பவரது தேசிய அ.அட்டை (391461996V) 10.01.2006 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கந்தையா நாகப்பு, சிவன்கோயிலடி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# தவறிவிட்டது

ஜனவரி 2007இற்குரிய எனது [illegible] நாச்சிமார் கோயிலடி [illegible] இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் [illegible] 1010/11, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

# வீடு தேவை

நெல்லியடி, மாலுசந்தி, [illegible] அதனை அண்டிய பிரதேசங்களில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 0775506244

# ஓராண்டு நினைவுகள்



திருமதி
## சந்திராதேவி கந்தசாமி

தோற்றம்: 21 - 12 - 1948
மறைவு: 31 - 01 - 2006

திதி: 21.01.2007
பூர்வ பக்க துதியை

ஆண்டொன்று சென்றபோதும்
திரும்பும் திசையெங்கும்
உங்கள் நினைவுகள்
சுவரில் பட்டுத்திரும்பும் பந்தென
மீண்டும் மீண்டும்
எம்முள் மோதும்.

(57367)

இக்கிராணை,
கந்தரோடை.

குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2006ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்த 36 மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று தேர்ச்சியடைந்த 68 மாணவர்களையும் [மொத்தம் 104 மாணவர்கள்] பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களின் வெற்றிக்குத் தம்மை அர்ப்பணித்து சேவை ஆற்றிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் உதவி புரிந்த கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன், எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| 01. செல்வன் கைலாயநாதன் டினோசன் - 168 | 19. செல்வி சுஜீனா சுரேஸ் - 143 |
| 02. செல்வி துளசிகா உருத்திரேஸ்வரன் - 168 | 20. செல்வன் செல்வராசன் கார்த்திகன் - 142 |
| 03. செல்வன் ஆனந்தராசா ஹரிசங்கர் - 167 | 21. செல்வி பவநிதா புவிராஜ் - 142 |
| 04. செல்வன் தர்மானந்தசிவம் நவீனன் - 163 | 22. செல்வன் மகாரூபன் பானுசன் - 141 |
| 05. செல்வன் சுகேந்திரன் அனோஜன் - 163 | 23. செல்வி கார்த்திகாயினி வர்ணகுலராஜா - 141 |
| 06. செல்வி சபாரத்தினி சிவபாலன் - 162 | 24. செல்வன் தியாகராசா விகேசன் - 140 |
| 07. செல்வன் சிறீதாஸ் தனுசன் - 162 | 25. செல்வி திலக்ஷினி விசாகராஜா - 140 |
| 08. செல்வி அக்ஷாயினி சந்திரராசா - 159 | 26. செல்வன் புஸ்பராசா கஜமுகன் - 137 |
| 09. செல்வன் மாப்பாணபிள்ளை சாருஜன் - 156 | 27. செல்வி சலஞ்சா சண்முகநாதன் - 136 |
| 10. செல்வன் சிவஞானரட்ணம் சிந்துஜன் - 154 | 28. செல்வன் மகேந்திரன் திசாந்தன் - 136 |
| 11. செல்வன் மகேந்திரன் சோபிகாந் - 154 | 29. செல்வன் சத்தியமூர்த்தி சாருஷன் - 135 |
| 12. செல்வன் கணநாதன் பிரணவன் - 151 | 30. செல்வன் பேரானந்தன் சங்கீர்த்தன் - 135 |
| 13. செல்வன் குமாரசாமி சாருஜன் - 148 | 31. செல்வி இமாஜினி மகேந்திரா - 135 |
| 14. செல்வன் மகிமராசா சரண்யன் - 148 | 32. செல்வி சாயந்தரி செல்வராஜா - 134 |
| 15. செல்வி அபிராமி நடராசா - 146 | 33. செல்வி சாவினி இராஜேஸ்வரன் - 134 |
| 16. செல்வன் சிவசுப்பிரமணியம் பிரசாந்தன் - 145 | 34. செல்வன் விக்கினேஸ்வரன் கஜகரன் - 133 |
| 17. செல்வி ஆஷா ஜெஸ்ரின் - 144 | 35. செல்வி சங்கீர்த்தா சதீஸ் - 133 |
| 18. செல்வன் முரளிதரன் குருபரன் - 144 | 36. செல்வன் ஒளிவர்ணன் தவகேநன் - 133 |

இம்மாணவர்களைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா நிகழ்ச்சி இன்று (21.01.2007) பாடசாலை சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. எமது பாடசாலையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பெற்றோர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(57366)

# தேவை

வெற்றுப் பால்மா பைக்கற்றுகள் தேவை.
ஒரு ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படும்.
பூங்கனிச் சோலை,
திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி. தொ.பே.: 222 2976

# The International Committee of the Red Cross
## Vacancy Field Officer - Protection

The International Committee of the Red Cross Office in **Jaffna** has an opening for the above post.

**Job description:**

- Assists the delegate in collecting and following up of information on missing people, handling protection cases in the field and family reunification needs
- Assists the delegate and participates actively in information analysis regarding protection issues and security
- Advises the delegates in fields such as culture, politics, economy etc.
- Maintains contact with ICRC beneficiaries living in the area
- Assists in maintaining and developing network of ICRC interlocutors
- Assists the delegate in reporting, translates written documents (English to Tamil and reverse)during meetings
- Disseminates information on ICRC and basic International Humanitarian Law to communities and interlocutors
- Represents ICRC in the field

**Qualifications**

- Graduate level education or secondary level education with at least 5 years relevant experience
- Minimum 1 year experience with ICRC or 3years experience in similar capacity
- Excellent computer literacy in MS Office – MS Word, MS Excel, MS PowerPoint
- Very good interpersonal skills and experience in dealing with public
- Excellent communication skills written and oral, fluent in Tamil and English is necessary

We are looking for a team player who shows empathy towards ICRC clients and respect for ICRC interlocutors. He/she is capable to work independently and must show initiative. The person should demonstrate a sense of responsibility and confidentiality. Flexibility and resistance to pressure will be considered as key assets. Further, the candidate should be willing to travel all over the country.

Date of employment : **Immediate**
Duration : **Initially for one year, renewable**

Interested applicants with proper qualifications should send their complete CV in English together with copies of certificates, references and contact phone number on or before 31st January 2007 to:

**Administration,
ICRC , 120 Temple Road
Jaffna**

**Only candidates meeting the above-mentioned criteria will be considered.**

# விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 21XXXX தொடரிலக்க முச்சக்கர ஆட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: இந்திராமாலிகா இல்லம், [illegible] லேன், உரும்பிராய் தெற்கு.
தொ.பே.: 077 5164248

# தேவை

ராஜா பான்சிக் கடைக்கு வேலை ஆள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
ராஜா பான்சி,
153, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# தவறிவிட்டது

திருமதி வரதராசன் நிர்மலா என்பவருடைய தே.அ.அ (628591083V), விசேட அ.அ., இலங்கை வங்கி கணக்குப் புத்தகம் (1131373) என்பனவற்றுடன் முக்கிய ஆவணம் அடங்கிய கைப்பை 16.01.2006 அன்று கஸ்தூரியார் வீதிக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கியில் ஒப்படைக்கவும். தொ.பே.: 021 222 9783

# விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Canon கமரா, Yashica கமரா, Panasonic வீடியோ, CD பிளேயர், உடற்பயிற்சிக் கருவி (AB Shaper), மேசைகள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 171A, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
222 3324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# மண்ணின் மைந்தர்களுக்கு துரோகம் இழைக்கும் செயற்பாடு

வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - ஒரு விடு தலைப் போராட்டம் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது. தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை பெரும் சிக்கலாக விஸ்வரூபம் எடுத்து இலங்கைத் தீவையே தனது வன் முறைத் தீயால் சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றது.

உரிமை வேண்டி - கௌரவ வாழ்வு வேண்டி - நீதியும் நியாயமும் கோரி - சுதந்திரம் கேட்டு - தமிழர்கள் நடத்தும் போராட்டம் ஒரு தீர்க்கமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. சுதந்திர வேள்வியில் தகித்துக் கொண்டிருக்கும் ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்தின் சூட்டை - தகிப்பை - சகிக்க முடியாது தடுமாறுகின்றது தென்னிலங்கைப் பேரினவாதம்.

புறச் சக்திகள், வெளிநாடுகள் போன்ற எவற்றினதும் ஆதரவின்றித் தனித்துத் தன்னந் தனியாக இந்தப் போராட் டத்தை ஈழத்தமிழர் தாயகம் முன்னெடுக்கின்றது. தமிழர் தாயக மக்களின் நேரடிப் பங்களிப்போடும் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஊக்குவிப்பு உதவியோடும் தமிழகத் தமிழர் களின் ஆத்மார்த்தமான ஆதரவோடும் மட்டுமே இந்த விடு தலைப் போரைத் தமிழர் தரப்பு மேற்கொண்டு வருகின்றது.

ஆனால் -

சர்வதேச ஆதரவோடு - குறிப்பாக ஏகாதிபத்திய சக்திக ளின் பெருமளவு ஆயுத மற்றும் இராணுவப் பயிற்சி உதவி கள், நிதிப் பங்களிப்புகள் போன்றவற்றோடு - இலங்கை அரசுப் படைகள் தமிழர்களை அடக்கி ஒடுக்கும் தமது படை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

அப்படி சர்வதேச உதவிகளோடு செயற்பட்டாலும் புலி களை அடக்கி ஒடுக்கும் - முற்றாகச் செய[illegible]க வைக்கும் - தமது இலக்கு ஈடேறாத நிலையில் அதை எட்டுவதற்கு வேறு விதமான - இராஜதந்திர ரீதியிலான - தந்திரோபாயங் களையும் கொழும்பு அரசு நாடுகின்றது.

ஆயுத வலிமைமிக்க அயல் நாடுகளை தமிழர் தாயகப் பிரதேசத்தோடு நேரடியாகத் தொடர்புடைய திட்டங்களில் ஈடுபடவைத்து, அவற்றின் நலனைப் பேணும் மையங் களை அங்கு உருவாக்குவதன் மூலம் அப்பிரதேசம் தமிழர் தரப்பின் - புலிகள் தரப்பின் - கைகளில் வீழாமல் இருப் பதற்குச் சம்பந்தப்பட்ட நாட்டின் முழு உதவியையும் அனு சரணையையும் உறுதிப்படுத்திக் கொள்வது. - இதுதான் கொழும்பு வகுத்துள்ள தந்திரோபாய யுக்தி.

பலாலி விமானத்தள ஓடுபாதைத் திருத்தப் பணிகளுக் கான ஒப்பந்தத்தை - அதற்கான நிதி உதவி வழங்கும் பொறுப்பை - இந்தியாவிடம் ஒப்படைக்கும் சாட்டில் அந்த ஓடு தளத்தைப் பயன்படுத்தும் விசேட உரிமையையும் இந்தியா வுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தது கொழும்பு. இந்த நட வடிக்கை மூலம் இந்த விமானத் தளத்தில் - படைத் தளத் தில் - இந்தியாவின் நலனையும் சேர்த்து முடிச்சுப் போட் டுக்கொண்டது இலங்கை.

ஆக, இனி பலாலி விமானப் படைத் தளத்தைப் புலிகள் கைப்பற்ற முயற்சித்தாலும் அந்த விமானத்தளத்தின் ஓடு பாதையைப் பயன்படுத்தும் உரிமையுடைய - அந்தப் படைத் தளத்தின் நலனில் அக்கறையுள்ள - இந்தியா அதற்கு அனு மதிக்காது. அப்படி ஒரு சிக்கல் நிலைமை வந்தால் புலிக ளுக்கு எதிராக இந்தியா மீண்டும் களத்தில் இறங்கி தனக்கு உதவும் என்று கொழும்பு கருதுகின்றது.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக் குக் கையளித்தமையும் சம்பூரில் இந்தியாவின் நேரடிப் பங்களிப்போடு அனல் மின் நிலையம் கட்ட முயற்சிக்கின்ற மையும், மன்னார் என்று கடற்படுக்கையில் எண்ணெய் அகழ வுப் பணிக்கான பொறுப்பு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வழங்கப்பட்டமையும் இந்த நோக்கத்தில்தான்.

மன்னாரில்- கரையை ஒட்டிய கடற்படுக்கையில் - எண்ணெய்ப் படிவுகள் பெருமளவில் புதைந்து கிடக்கின்றன என்ற உண்மையைக் கண்டுபிடித்து, அது பற்றிய ஆய்வு களை நடத்தி, கணிப்பீடுகள், மதிப்பாய்வு அறிக்கைகளை நோர்வே நாடே தயாரித்தது. நிலத்துக்குக் கீழான எரிபொருள் அகழ்வுப் பணியில் உலகில் முன்னணி நாடு நோர்வேயே. இலங்கையை அண்டிய கடற்படுக்கையில் எரிபொருள் புதைந்து கிடக்கின்றமையைக் கண்டுபிடிக்கும் தகுதியும், திறமையும், வலிமையும் நோர்வேக்கு இருந்ததால் அந்தப் பொறுப்பை அந்த நாட்டிடம் ஒப்படைத்தது கொழும்பு.

ஆனால், அகழ்வுப் பணியை நோர்வேக்குக் கையளிக்க மறுத்துவிட்டது அது - அதற்குக் காரணம் உண்டு.

அகழ்வுப் பணி ஆரம்பித்த பின் அப்பிரதேசத்தில் புலிக ளின் தலையீடு வருமானால், அல்லது அக்கடல் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் விழும் ஆபத்து ஏற்படுமா னால், அத்தகைய சந்தர்ப்பத்தில் நோர்வே புலிகளை இரா ணுவ ரீதியில் எதிர்கொண்டு நின்று, அப்பிரதேசத்தைத் தக்க வைப்பதற்கு தனக்கு உதவாது என்று கொழும்பு நினைக் கின்றது. ஆனால் இவ்விடயத்தில் இராணுவ வலிமை பொ ருந்திய இந்தியாவும், சீனாவும் உறுதியாக நின்று தனக்கு உதவக் கூடியன என்று கொழும்பு கருதுகின்றது; நம்புகிறது.

அதனாலேயே நோர்வே இவ்விடயத்தில் இதுவரை ஆற் றிய ஆய்வுப் பணிகளுக்கு ஒரு தொகைப் பணத்தைக் கணக்கிட்டு, அதற்கு வழங்கி, அந்நாட்டை இப்பொறுப்பி லிருந்து வெட்டி விட்டு, அகழ்வுப் பணியை இந்தியாவிட மும், சீனாவிடமும் வழங்கத் தீர்மானித்திருக்கின்றது கொழும்பு.

இலங்கை அரசின் இத்தகைய இராஜதந்திர வலைகளில் சிக்கி, தமிழர் தாயகத்தின் வளங்களைச் சூறையாடும் பெரும் திட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளும் வல்லாதிக்க நாடுகள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த மண் ணின் ஆட்சிக்கட்டமைப்புக்கான உரிமை பற்றிய சர்ச்சை தீர்க்கப்படாமல் அது பெரும் இனப் போராக வெடித்துள்ள இந்தச் சூழலில், பொருளாதார, வர்த்தகக் கூட்டுறவு என்ற போர்வையில் காலைப் பதிப்பது உகந்தது அல்ல.

சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்திலும், மன்னார் எண்ணெய் அகழ்வுப் பணியிலும் தம்மை ஈடுபடுத்த முயற் சிக்கும் இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கு இது சமர்ப்பணம்.

அந்தந்தப் பகுதி மக்களின் நலன்களுக்கு எதிராக, அரசாங்கம் என்ற தலைப்பாகை கட்டி நடத்தப்படும் உள் நோக்கம் நிறைந்த சூழ்ச்சிகளில் தங்களையும் சம்பந்தப் படுத்திக் கொள்வது, ஒரு வகையில் மண்ணின் மைந்தர்க ளுக்குச் செய்யப்படும் துரோகமே.

## வடமராட்சியில் பாடசாலைகளை பகிஷ்கரிக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.21

பருத்தித்துறை வேலாயுதம் ம.வி. மாணவன் பரஞ்சோதி தனஞ்சயன், ஹாட்லிக் கல்லூரி மாணவன் முருகானந் தன் பரமானந்தன் ஆகியோரை விடு விக்கக்கோரி வடமராட்சி பாடசாலைகளின் மாணவர்கள் நாளை திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகளைப் பகிஷ் கரிக்க முடிவு செய்துள்ளனர்.

வடமராட்சி தமிழ் மாணவர் ஒன்றி யம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-115)

## ஊடகவியலாளர்களுக்கு அத்தியாவசிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜன.21

குடாநாட்டு ஊடகவியலாளர்களுக்கு யாழ்.மாவட்ட விற்பனை கூட்டுறவு நுகர்வோர் சமாசத்தால் எதிர்வரும் சனிக் கிழமை அத்தியாவசிய உப உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட வுள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு பங்கீட்டு அட்டை மற்றும் ஊடகத் தொழில் அட்டை அல்லது உரிய ஆவணத்துடன் சமூக மளித்து பொருள்களை பெற்றுக் கொள்ள லாம் என்று வட இலங்கை பத்திரிகை யாளர் சங்கம் தெரிவித்துள்ளது.(1-203)

# சிறுதானியச்செய்கைக்கு விதை வகைகளைத் தருவிக்குக

## விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஜன.21

நெல் அறுவடை செய்தவயல்களில் சிறுதானியப் பயிர்செய்கையை மேற் கொள்ளுவதற்கு எள்ளு, பயறு, உழுந்து, கச்சான், கௌபி, சோழன் ஆகிய விதை தானியங்கள் இல்லை.

இவற்றை கொழும்பிலிருந்து எடுத்து வந்து கமநல சேவை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்க நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம் மேளனம் அரசாங்க அதிபரை இவ் வாறு கேட்டுள்ளது.

தற்போது மேற்படி விதை தானி யங்கள், கமநல சேவை நிலையங்களி லும் தனியார் விற்பனை நிலையங்களி லும் இப்போதுகிடைப்பதில்லை.

வழமை போல் நெல் அறுவடை செய்த பின் விவசாயிகள் மாசி மாத முற்பகுதி யில் இப் பிரதேசத்தில் சிறுதானிய செய்கையை மேற்கொள்வது வழமை யாகும்.

சம்மேளனத்தின் தலைவர் சி.பொ. மா.க.முதலியார் இக்கடிதத்தை அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இக் கடிதத்தின் பிரதி யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணை யாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (135)

# அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இனித் திறந்த சந்தையிலும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஜன.21

அத்தியாவசியப் பொருள்களை தனியார் வர்த்தகளுக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரிசி, சீனி, பருப்பு ஆகிய அத்தி யாவசிய உணவுப்பொருள்கள் இப் போது திறந்த சந்தையிலும் விநியோ கிக்கப்படுகின்றன.

அதேபோன்று இந்த வாரத்தில் இருந்து மா வகைகளும் வெளிச்சந்தை யில் விற்பனைக்கு விடப்படவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

பிரதேச செயலர்களிடம் அனுமதிப் பத்திரம் பெறாமல், ப.நோ.கூ.சங்கங் களிடம் தனியார் வர்த்தகர்கள் பொருள் களை வாங்கி விற்பனை செய்ய முடி யும் என்றும் -

தனியார் வர்த்தகர்கள் தாம் பெற்றுக் கொள்ளும் பொருள்களின் விவரங் களை பிரதேச செயலகங்களுக்கு அறி விக்கவேண்டும் என்றும் - அரச அதி பர் அறிவுறுத்தியுள்ளார். செயலகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கேபொருள் களை விற்பனை செய்யவேண்டும்.(அ-1)

# ஆட்டாமா மற்றும் கோதுமை மாவுடன் 'லிபர்பூல்' கப்பல் இன்று வருகின்றது

யாழ்ப்பாணம், ஜன.21

குடாநாட்டுக்கு ஆயிரத்து 900 மெற்றிக் தொன் மா வகைகளை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று பருத்தித் துறைக்கு இன்று வந்துசேரவுள்ளது.

திருகோணமலையில் இருந்து 'லிபர்பூல்' என்ற கப்பல் 750 தொன் கோதுமை மா மற்றும் 100 மெற்றிக் தொன் ஆட்டா மா, 50 மெற்றிக் தொன் ரவை ஆகியவற்றுடன் இன்று பருத்தித் துறைக்கு வந்துசேரும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது

கப்பலில் இருந்த மேற்படி மா வகை கள் இறக்கப்பட்டதும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளூடாக தனி யார் வர்த்தகர்களுக்கும் வழங்கப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

(அ-1)

**நாளை**

தை - 08

திங்கட்கிழமை

22.01.2007

திதி : சதுர்த்தி

பின்னிரவு: 03.46

நட்சத்திரம் : சதயம்

பிற்பகல்: 04.48 வரை

சதுர்த்திவிரதம்

சுபநேரம் : 12.35 - 02.05

ராகுகாலம் : 08.05 - 09.35

# அமைச்சரவை மாற்றங்கள் இம்மாதம் 29ஆம் திகதியன்று

## முன்னதாக புரிந்துணர்வு உடன்பாடுகள்

கொழும்பு, ஜன.21

அமைச்சரவை மாற்றங்களை எதிர் வரும் 29ஆம் திகதி மேற்கொள்வதற்கு அரசு உத்தேசித்திருப்பதாக அறியப் படுகிறது.

அதற்கு முன்னர் ஐ.தே.கவின் அதி ருப்திக் குழுவும் ஸ்ரீலங்கா காங்கிரசும் அரசுடன் இணைந்துவிடும் என அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஐ.தே.கவின் அதிருப்திக் குழுவுக் கும் அரசுக்கும் இடையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் அரசுக்கும் இடையிலும் தனித்தனியே புரிந்து ணர்வு உடன்பாடுகளைக் கைச்சாத்திடு வதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகச் சொல்லப்படுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வு பொருளா தார நெருக்கடிக்கான தீர்வு ஆகியவற் றின் அடிப்படையில் அரசுடன் புரிந்து ணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத் திட ஐ.தே.கவின் அதிருப்திக் குழு பேச்சு நடத்தி வருகின்றது என்றும் இப்பேச்சுக் கள் முன்னேற்றம் கண்டுள்ளது என்றும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த உடன்பாடு கைச்சாத்தானதும் அவர்கள் அரசுடன் உத்தியோகபூர்வ மாக இணைந்து கொள்வதாக தெரிவிக் கப்பட்டது. (அ-1)

# குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

## சைவ பரிபாலனசபை தேர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ். சைவ பரிபாலனசபை நடத் தும் சைவநெறித் தேர்வுக்கான வினாத் தாள்களை தபாலில் அனுப்புவதில் ஏற் பட்ட தாமதத்தால் தேர்வு பிற்போடப் பட்டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி நடத்து வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் தேர்வுக்கான தபால் பொதிகளை வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவ தில் ஏற்பட்ட தாமதத்தால் தேர்வு பிற் போடப்பட்டதாக சபையின் பதில் பரீட்சைச் செயலர் தெரிவித்தார்.

(1-202)

## கைதடியில் மருத்துவ முகாம்

தென்மராட்சி, ஜன.21

கைதடிப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் இன்று கைதடி மத்தி குமரநகர் சனச மூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின ரால் இந்த மருத்துவ முகாம் நடத்தப் படவுள்ளது.

கண், நீரிழிவு, இரத்த அமுக்கம், தொழு, பெண்நோயியல், சிக்குன் குனியா, மலேரியா, வாய் புற்று ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டு மருந்துகள் வழங்கப்படவுள்ளன.

கைதடி பிரதேசத்தைச் சேர்ந்த மக் கள் இந்த முகாமில் கலந்து கொள்ளு மாறு கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபி [illegible]

## மீன் பிடியியல் டிப்ளோமா மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியி யல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்தக் கற்கை நெறியின் விரி வுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் மீன்பிடியி யல் விஞ்ஞான டிப்ளோமாகற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர் களையும் புதிதாகப் பதிவு செய்த மாணவர்களையும் கலந்து கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (1-202)

## ஆனைக்கோட்டையில் இரு இளைஞர்களைக் காணவில்லை

ஆனைக்கோட்டையில் நேற்றுமுன் தினம் இரு இளைஞர்கள் பட்டப் பகலில் கடத்தப்பட்டு காணாமற்போயுள்ள தாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு வில் முறையிடப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை ஆனைக் கோட்டையைச் சேர்ந்த நாகேந்திரம் தயாளன் (வயது 32) என்பவரையும் அவருடன் சென்ற நண்பர் ஒருவரையும் இனந்தெரியாத ஆயுததாரிகள் பகல் வேளையில் வானில் வந்து கடத்திச் சென்றுள்ளனர்.

அண்மைக் காலமாக பெரும் எண் ணிக்கையான இளைஞர்கள் கடத்தப் பட்டும் காணாமற்போகும் சம்பவங் கள் மேலும் அதிகரித்துள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி [illegible] தெரிவித்துள்ளார். (அ-9)

## காரைநகரில் குடும்ப அட்டை மீளாய்வு

காரைநகர்,ஜன.21

காரைநகர் பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட குடும்பங்களின் பங்கீட்டு அட்டை மீளாய்வு நாளை திங்கட்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் இடம் பெறவுள்ளது.

அனைவரையும் குறித்த நாள் களில் சமுகமளித்து பங்கீட்டு அட்டை களை மீளாய்வு செய்யுமாறு கேட்கப் பட்டுள்ளது. (1-73)

## குடாநாட்டு நிலைமைகளை எம்.பிக்கள் கண்டறிந்தனர்

யாழ்ப்பாணம், ஜன.21

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்க ளான எம். கே.சிவாஜிலிங்கம் என். ஸ்ரீகாந்தாவும் நேரில் கண்டறிந்த னர்.

யாழ். அரச அதிபர், யாழ். பல்கலைக் கழக பதில் துணைவேந்தர் ஆகியோ ரைச் சந்தித்த இவர்கள் இங்குள்ள நிலைமைகள் குறித்தும் கேட்டறிந்த னர்

(அ-1)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.21

இந்துசமய கலாசார அமைச்சு தென் மராட்சிப் பிரதேசத்தில் நடத்தும் பொங்கல்விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தென்மட் [illegible] வில் வேரற்கேணி கந்தசுவாமி கோ [illegible] லில் நடைபெறவுள்ளது. (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்து வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) அக்கறையையும் கவலையையும் வெளி யிட்டுள்ளது.

வாகரைப் பகுதியில் இருந்து இதுவரை வெளியேறாமல் இன்னமும் சுமார் 9,500 பேர் இருக்கக்கூடும் என்று ஜெனீவாவில் உள்ள யு.என்.எச்.சி.ஆரின் பிரதிநிதி லிஸா செலின் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' செய்திச் சேவைக்குத் தெரிவித்திருக்கிறார்.

இடம்பெயரும் அகதிகளின் சரியான எண்ணிக்கை அவர்கள் தஞ்சம் அடைந்துள்ள இடங்கள், அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள வசதிகள் என்பன குறித்து சரியான மதிப்பீடு ஒன்றைச் செய்வதற்காக எமது அலுவலர்கள் இப்போது வெளிக் களப் பணியில் ஈடுபடத் தொடங்கி விட்டனர்.

இதுவரை வாகரையில் இருந்து இடம் பெயராமல் சிக்குண்டு போயிருக் கக்கூடிய பொதுமக்கள் குறித்தே நாம் மிகவும் கவலை கொண்டுள்ளோம். - என்று யு.என்.எச்.சி.ஆரின் ஜெனீவா தலைமையக அதிகாரிகளில் மற்றொருவரான ரோன் றேய்மண்ட் தெரிவித்தார்.

### பெரிய இடப்பெயர்வு

வாகரையில் ஒரு மாத கால இடை வெளியில் நடைபெற்ற இரண்டாவது பெரிய இடப்பெயர்வாகும்.

கடந்த டிசெம்பர் மாத இறுதியில் சுமார் 20,000 பொதுமக்கள் பெருக்கெடுத்து ஓடிய ஆறுகள் மற்றும் அடர்ந்த காடுகள் ஊடாக இடம்பெயர்ந்திருந்தனர். சண்டைகள் நடைபெறும் வேளைகளில் அவற்றில் மக்கள் அகப்பட்டு, பாதிப் பில்லாது வெ[illegible] றுவது கஷ்டமாகி விடுவதுண்டு.

அதனாலேயே மோதல் பிரதேசங்களி லிருந்து பொதுமக்கள் பாதுகாப்பாக வெளி யேறுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று சண்டையிடும் தரப்புகளிடம் நாம் கேட் பதுண்டு - என்றும் றேய்மண்ட் கூறினார்.

(அ)

## அன்பு வெளியீடு

ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின் 2007 - தரம் 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன

வினாத்தாள்கள் பெற விரும்பும் பாடசாலைகளும் பரீட்சை எழுத விரும்பும் மாணவர்களும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
அன்பொளி கல்வியகம், யாழ்ப்பாணம்.
அன்பொளி கல்விநிலையம், சாவகச்சேரி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**இராசா திருஞானசம்பந்தர் (சாம்)**

(ஓய்வு பெற்ற P.W.D ஓவசியர்)

தோற்றம் : 16.01.1924
மறைவு : 22.12.2006

எமது குடும்பத்தலைவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

494, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (57040)
குடும்பத்தினர்.

உங்கள் பிள்ளைகள் கணித பாடத்தில் அதிவிசேட சித்தி பெற வேண்டுமென விரும்புகிறீர்களா?

அப்படியாயின் எமது Group Class இல் இணைத்து விடுங்கள்

Grade 9, 10, 11 (கணிதம் மட்டும்)
[illegible]

By :V.ஜெகன்
Dip in Tech
(Special Method in Maths)
T.P 0776510149
166, நாவலர் வீதி, யாழ்.
(கஸ்தூரியார் வீதிச் சந்திக்கருகில்)

## தேவை

LF MODEL 1500, 2500 அலுமினியம் கோர்வை உள்ள வாகனம் தேவை. விற்பனைக்கு உள்ளோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
Bio Tec International Ltd, 131/2, Palaly Road, Thirunelvely, Jaffna. T.p : 4590907

## தவறிவிட்டது

இராஜநாயகம் டில் றுக்சன் என்பவரின் N/1933/MC/96 என்ற இலக்கமுடைய CLINIC கொப்பி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். இல.33, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 4590987, 0779122651

## வேலையாள் தேவை

இராமநாதன் வீதியில் உள்ள தனுஸ் உணவகத்திற்கு சமையல் வேலைக்கு ஆள் தேவை.
தொடர்பு: இராமநாதன் வீதி, மிலேனியம் முன்பாக.

## கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் ஸ்ரீ வதிரிபீட விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அருள்மிகு ஸ்ரீ வதிரிபீட விநாயகர் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமிகளுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட இராஜகோபுரத்திற்கும் மகா கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

**காலம்:**

*23.01.2007 செவ்வாய்க்கிழமை - காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும். அதேதினம் காலை 8.30 மணிக்கு பண்ணிசைக் கச்சேரி ஆரம்பமாகும். 24.01.2007 புதன்கிழமை - காலை 9 மணி 51 நிமிடமுதல் ஸ்தூபி அபிஷேகம், மகா கும்பாபிஷேக வைபவம் நடைபெறும்.*

- ஆலய நிர்வாக சபையினர்.

# யுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சி - ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையை முறைப்படி செயற் படுத்தி எல்லோருக்கும் ஏற்புடையதாக தீர்வு ஒன்றை எட்ட வேண்டும். அதற்காக உழைப் பதற்கு சகல அரசியல் தலைவர்களும் முன் வர வேண்டும் [illegible] றது தூத[illegible] பிளேக் வலியுறுத்தியுள்ளார்.

(அ-1)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் சோ. சிவகணேசன் அவர்களின் அன்புத் தந்தை

**மருதப்பிள்ளை சோதிநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வலி.தெற்கு, உடுவில். (57383)
நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், உடுவில்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, பழைய வீதியில் தற்போது வசித்தவருமாகிய

**திருமதி இலட்சுமியம்மா நடராசா**

தோற்றம் 19.03.1923
மறைவு 22.12.2006

22.12.2006 வெள்ளிக்கிழமை அமரத்துவமடைந்த எமது அன்புத் தாயாரது மறைவின் 31ஆம் நாள் நிறைவையொட்டி இன்று (21.01.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் பழைய வீதி, இருபாலை. (சி.51886)
குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

**மனோகரன் பரந்தாமன்**

அன்னை மடியில்: 02.08.1989
அரக்கனின் அழிப்பில்: 08.12.2007



*பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவில் நீ வாழ்ந்த*
*காலங்கள் வசந்தம் தான்*
*காலனவன் கண்ட கனவில் முடிவில் நீ*
*காலத்தை வென்றவனாகி விட்டாய்*
*ஞாலத்தில் நீ வாழ்ந்த நாள் மட்டும் எம்*
*நெஞ்சில் நிலைத்து உன் ஞாபகங்கள்*
*காலத்தின் ஓட்டத்தில் கரையாது*
*நாம் வாழும் நாள் மட்டும் அழியாது*

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் இன்று (21.01.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மட்டுவில். (57376)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா இராசலிங்கம்



இணுவில் மேற்கு, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசலிங்கம் 18.01.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகேசு - நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தங்கரத்தினம், பரமலிங்கம், அப்பரும் மகேஸ்வரி(இந்தியா), கனகலிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் சகோதரரும் சுதாகினி, சுபாஜினி (யா/கட்டுடை சைவவித்தியாசாலை ஆசிரியர்), சிவநந்தினி, வாசுகி, விவேகானந்தி, குன்றக்குமரன், பார்த்தீபன் ஆகியோரின் தந்தையும் தவக்குமார், கண்ணன், லலிதாஸ் ஆகியோரின் மாமனும் தலர்ஜனா, டனோஜன், இந்துஜனா, கிசாந்தி, தனுஜன், சர்மினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.01.2007 வெள்ளிக்கிழமைஅவரின் இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டுவினி,இணுவில் மேற்கு.* (57360)
தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

### அம்பலவாணர் கந்தையா சிவபாதசுந்தரம் (A.K.S.)

(ஓய்வுபெற்ற சுகாதார சேவையாளர்)



மாதகலைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவணர் கந்தையா சிவபாதசுந்தரம் 19.01.2007 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா -தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் மகனும் நாகபூஷணியின் அன்புக் கணவரும் குகனேசபாலன், ஜெகதாம்பாள்,கருணாகரன் (அமெரிக்கா), சத்தியாம்பாள்(கனடா), காலஞ்சென்ற புவனம்பாள், ஞானாம்பாள்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வநாயகி, திருக்கேதீஸ்வரன், கலையரசி, சிவநாதன், விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயகாந், ஜெயரதி,நீரஜா, கவிராஜ், செளமியா, நவநீதன், நர்த்தனன், குணேஸ், ஜனேஸ், தருணி, செந்தூரன், சஞ்சீவ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.01.2007 புதன்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*அளவெட்டி தெற்கு.*
*கனடா தொ.பே.:4162975944* (57377)
தகவல்:
பொ.திருக்கேதீஸ்வரன்(மருமகன்).
தொ.பே.: 0779356155

### திருமதி புஸ்பராணி இராசகோபால்ன்

அல்வாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட இ.புஸ்பராணி 19.01.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசகோபாலனின் மனைவியும் ரகீசனின் (வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி பழையமாணவன்) அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகள் நேற்று (20.01.2007) சனிக்கிழமை தற்காலிக முகவரியான சரசாலை வடக்கு, தெய்வங்கேணி வீதியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
*சரசாலை வடக்கு, சரசாலை.* (சி-51889)
தகவல்:
இ.ரகீசன் (மகன்).

### கதிர்காமத்தம்பி திருக்குமாரன்

அல்வாய் திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வல்லிபுரக் குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி திருக்குமாரன் நேற்று 20.01.2007 சிவபதமடைந்தார்.

அன்னார் கதிர்காமத்தம்பி - சிவபாக்கியத்தின் அன்பு மகனும் சிவனேஸ்வரியின் ( உபதபாலதிபர் -திக்கம்) அன்புக் கணவரும் ஜெயக்குமாரின் அண்ணரும் சத்தியமூர்த்தி (கவிதா றேடர்ஸ்-பருத்தித்துறை), காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் கவிதா, கஜன், கோபிநாத், அனுஷா, தர்ஷிகா, கனிஸ்ரா, சுகித்தியன், மதுரிகன் ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.01.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வல்லிபுரக்குறிச்சி,*
*புலோலி.*
தகவல்:
குடும்பத்தினர்.

### பெரியதம்பி கந்தையா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மடுக்கோயில் பெரிய பண்டிவிரிச்சானை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கந்தையா 19.01.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்புக் கணவரும் ஆனந்தராசா (இ.போ.ச.- மன்னார்), திரவியராசா (மேசன்), காலஞ்சென்றவர்களான கந்தசாமி, உதயலட்சுமி (தங்கம்) ஆகியோரின் தந்தையும் சுசிலா, தவமணி, காலஞ்சென்ற தருமரத்தினம் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான பூங்காவனம், சோதி, கார்த்திகேசு ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பெரிய பண்டிவிரிச்சானில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (57380)
தகவல்:
வை.கணபதிப்பிள்ளை (மைத்துனர்).

## மரண அறிவித்தல்கள்

### சிவக்கொழுந்து நடராஜசுந்தரம் (அப்பு)



ஆசாரி ஒழுங்கை,தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து நடராஜசுந்தரம் (அப்பு) 09.01.2007 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - பூரணம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற தேவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பசுபதி - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் சரஸ்வதி, இராஜலட்சுமி (கனடா), சிவபாலசுந்தரம், சரவணபவன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), இராமநாதன், கதிர்காமநாதன், காலஞ்சென்ற இராஜலிங்கம், கணேசலிங்கம் (சுவிஸ்), பரமேஸ்வரன், கமலேஸ்வரன் (கனடா) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2007) ஞாயிறு முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆசாரி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு,*
*தாவடி.* (57378)
தகவல்:
சி.பரமேஸ்வரன் (சகோதரன்).

### திருமதி சரஸ்வதி அப்பாத்துரை

(ஓய்வுபெற்ற ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி அப்பாத்துரை 18.01.2007 வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம் - மாமங்கம் தம்பதியரின் அன்புப்புதல்வியும் பொன்னுத்துரை அப்பாத்துரையின் (ஓய்வுபெற்ற மருத்துவ அதிகாரி) அருமை மனைவியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும் வைத்திய கலாநிதி மாலதி (ஆஸ்திரேலியா), மாதினி (ஆஸ்திரேலியா), செந்தூரன் (ஆஸ்திரேலியா, சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் கலாநிதி இளையதம்பி சிவபாலன் (ஆஸ்திரேலியா), பாலசுப்பிரமணியம் திவாகரன் (ஆஸ்திரேலியா), வசந்தி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் பாலினி, இங்கிதன், சாம்பவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கணேசரத்தினம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), காலஞ்சென்ற வைத்தியகலாநிதி சுப்பிரமணியம், வள்ளிநாயகி (சிங்கப்பூர்), கங்காதரன் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்களநாயகி (கொழும்பு), காலஞ்சென்ற இரத்தினமணி, காலஞ்சென்ற நாகரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், ஸ்கந்தவரோதயக்கல்லூரி, சுன்னாகம்), தேவிகாராணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2007) திங்கட்கிழமை perth ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15, Turriff Road,*
*Floreal, perth,*
*W-Australia. 6014* (57371)
தகவல்:
கலாநிதி அ.செந்தூரன் (மகன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் இராசலட்சுமி கந்தையா**

தோற்றம்: 18.07.1939 ★★ மறைவு: 22.12.2006

கடந்த 22.12.2006 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (21.01.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த[illegible]: சி.கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர்)
[illegible]லை கிழக்கு, மீசாலை. (57368)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**க.நடராசா பத்தர்**

புவியில் 09-12-1911
இறையில் 22.12.2006

22.12.2006 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவராகிய நடராசாப் பத்தரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்மான நன்றியைத் தெரிவிப்பதுடன் 21.01.2007 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியநிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முருகமூர்த்தி கோயிலடி, கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு. (57372)
குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி. இலட்சுமி அம்மா கனகசபாபதி**

திதி : 23 - 01 - 2007

நினைவழியா நினைவாக எங்கள் நெஞ்சங்களில் வாழும் குலவிளக்கின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

மகன், மகள், பெறாமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org